THE WORD OF CHRIST

தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

## இதழின் உள்ளே....


- ★ ஆசிரியருரை
- ★ உலக அளவில் பிரசித்திபெற்ற J.C.சோட் அவர்களின் செய்தி
- ★ பெண்களுக்கான பகுதி
- ★ சிறுவர்களுக்கான பகுதி
- ★ வேத அறிவுப் போட்டி
- ★ நாதன் அவர்களின் சரித்திர ஆய்வு
- ★ நாளும் நடப்பும்


## டிசம்பர் 2006


ஆசிரியர்
B.அர்ஜுனன்



மரம் 7 கனி 1

# ஆசிரியர் கடிதம்



கிறிஸ்துவின் வசனம் வாசகர்களுக்கு,

நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் தூய நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வருடத்தின் இறுதி மாதத்தைக் காணச்செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம். புதிய வருடத்தைக் காண காத்திருக்கும் நீங்கள் புதிய தீர்மானம் எடுப்பீர்கள். கர்த்தர் உங்கள் முயற்சிகளை ஆசீர்வதிக்க ஜெபிக்கிறோம்.


2007-ம் வருட காலண்டர் தேவைப்படுகிறவர்கள் உடனே ஒரு அஞ்சல் அட்டையில் உங்கள் பதிவு எண் Ref.No. யை எழுதி எமக்கு தெரியப்படுத்தவும். மேலும் இவ்விதழ் மூலம் தாங்கள் பெற்ற நன்மையை குறிப்பிடவும். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

அன்புடன்,
ஆசிரியர்.




**கிறிஸ்துவின் சபையார் வழங்கும்**

**கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சி**




உங்கள் WIN TV -யில்
ஒவ்வொரு வாரமும் திங்கள்,
செவ்வாய் மற்றும் வியாழன், வெள்ளி
காலை 6.15 முதல் 6.30 மணி வரை
பாருங்கள். மேலும் உங்கள் வானொலியில் இலங்கை
ஆசிய சேவை SW 49 மீட்டரில்,
ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல்
6.00 மணி வரை கேளுங்கள்.

செய்தியாளர்
B.அர்ஜுனன்




**THE WORD OF CHRIST**
P.O.BOX.5
BATLAGUNDU -624 202 S.INDIA

**Phone: 04543 263278 Mobile: 9443558041**


"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15.
"The Churches Of Christ salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# திவேர்ட் ஆப் கிறைஸ்ட்

**THE WORD OF CHRIST**

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

**மரம் – 7 டிசம்பர் – 2006 கனி – 1**


ஆசிரியருரை

## நியாயப்பிரமாணம் - கிருபையும், சத்தியமும்
## THE LAW - GRACE AND TRUTH



"நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின" (யோவா.1:17). இவ்வசனம் யோவானுக்கு பரிசுத்தஆவியானவராலே மிகத்தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. நாம் வேதாகமத்தை படிக்கும்போது யார், யாருக்கு, எப்பொழுது என்ற கேள்வியோடு படித்துக் கற்றுக்கொள்ளவேண்டும். மேற்கண்ட வசனத்திலே நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாக கொடுக்கப்பட்டது என அறிகிறோம். ஆக மூன்று கேள்வியில் ஒன்றுக்கு விடை வந்துவிட்டது. இக்கட்டளையைக் கொடுத்தவர் பிதாவாகிய தேவன். யாருக்கு கொடுக்கப்பட்டது? இஸ்ரவேல் மக்களுக்கு கொடுக்கப்பட்டது. எப்பொழுது? மோசேயின் காலத்தில் கொடுக்கப்பட்டது. இப்பொழுது இவ்வசனத்தின் முற்பகுதியை புரிந்துகொண்டிருப்பீர்கள் என நம்புகிறேன். பிற்பகுதியில் கிருபையும் சத்தியமும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின. இதை யார் கொடுத்தது? பிதாவாகிய தேவன். யாருக்கு கொடுக்கப்பட்டது? உலகமெங்கிலுமுள்ள அனைத்து தரப்பினருக்கும். எப்பொழுது கொடுக்கப்பட்டது? கிறிஸ்துவின் காலத்தில் அதாவது முதல் நூற்றாண்டில் கிறிஸ்துவின் மூலமாக கொடுக்கப்பட்டது.

**நியாயப்பிரமாணம்:** "மோசே வந்து, கர்த்தருடைய வார்த்தைகள் யாவையும் நியாயங்கள் யாவையும் ஜனங்களுக்கு அறிவித்தான்; அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் ஏகசத்தமாய்: கர்த்தர் அருளின எல்லா வார்த்தைகளின்படியும் செய்வோம் என்று பிரதியுத்தரம் சொன்னார்கள்" (யாத்.24:3). தேவன் மோசேயின் மூலமாக கொடுத்த இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளை இஸ்ரவேலர்கள் ஏற்றுக்கொண்டு அந்த வார்த்தைகளின்படி செய்வோம் என்று பிரதியுத்தரம் சொன்னார்கள் என்று வாசிக்கிறோம். இந்த

பிரமாணத்தைக் குறித்து புவுல் எழுதும்போது; "....நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம். இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை. இப்படியிருக்க நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது; அதைக்குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிறது. அது இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் பலிக்கும், வித்தியாசமே இல்லை" (ரோம.3:19:22). இப்பொழுது நாம் இந்தப் பிரமாணத்தின் கீழ் இல்லை. மேலும் தேவனுடைய நீதி வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அதைக்குறித்து நியாப்பிரமாணமே சொல்லுகிறது என்று நாம் காண்கிறோம். கிறிஸ்து இயேசுவின் மூலமாக விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுகிறோம்.

"இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்து வரக் கைப்பிடித்த நாளிலே அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப்போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார் அந்நாட்களுக்குப் பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே.31:31–33). அவர் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து மூலமாக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையானது பிதாக்களோடு பண்ணின உடன்படிக்கையின்படி இருக்கப்போவதில்லை என்பதை இந்த தீர்க்கன் மூலமாக தெளிவுபடுத்துகிறதை நாம் வாசிக்கிறோம். அதை இருதயத்தில் எழுதப்போவதாக சொல்லியிருக்கிறார். ஆக அழிந்துபோகாத உடன்படிக்கையை ஏற்படுத்தியிருக்கிறார் என நாம் அறிகிறோம். அந்த உடன்படிக்கைக்கு திரும்பவேண்டும். "மேலும், மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம் வந்தது; அப்படியிருந்தும், பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று. ஆதலால் பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டதுபோல, கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்தியஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது" (ரோம.5:20,21).



**கிருபையும் சத்தியமும்:** நியாயப் பிரமாணம் மோசே மூலமாக கொடுக்கப் பட்டதைப் போல கிருபையும் சத்தியமும் இயேசுகிறிஸ்து வினால் உண்டாயின. "மோசே தேவனுடைய வீட்டிலே எங்கும் உண்மையுள்ளவனா யிருந்தது போல, இவரும் தம்மை ஏற்படுத்தினவருக்கு உண்மையுள்ளவரா யிருக்கிறார்" (எபி.3:2). தேவன் தம்மிடத்தில் கொடுத்த கட்டளையை ஆண்டவரா கிய இயேசுகிறிஸ்து பூமியிலே நிறைவேற்றினார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவு மில்லை; அவர் வையப்படும் போது பதில்வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்.

கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் என்ற நியாயப்பிரமாணத்தின்படியான கட்டளைகளை எல்லாம் மாற்றிப்போட்டு தமது மிகுந்த கிருபையினாலே ஜனங்களை இரட்சிக்க திட்டம் கொண்டார். பத்துக்கட்டளைகளில் 'விபசாரம் செய்யாதிருப்பாயாக' என்பதும் ஒரு கட்டளை (யாத்.20:14). புதிய ஏற்பாட்டு காலத்திலே அதை நாம் கைக்கொள்ளதேவையில்லை என்றால் விபசாரஞ்செய்யலாமா? என்ற ஒரு கேள்வி எழும்புகிறது. இங்கே நமது ஆண்டவர் அவைகளுக்கான சிறப்பான விளக்கத்தைக்கொடுக்கிறார். "விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று" (மத்.5:27,28). பூர்வத்திலே விபசாரஞ்செய்தால் தான் பாவம். புதியஏற்பாட்டு காலத்தில் இருதயத்தில் நினைத்தாலே பாவம். ஆகையால் தான் இது கடினமான உபதேசம் என்றார்கள்.

இவைகளை அறிந்த கர்த்தர் தமது மிகுந்த கிருபையின்படி இரங்கினார். "ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்; பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்துபோகக் காலம் சமீபித்திருக்கிறது" எபி.8:12,13–ல் எபிரெய ஆசிரியர் குறிப்பிடுகிறார். பழமையானது என்று சொல்லும்போது அவர் நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப் படுத்தவில்லை, அதிக நன்மையான நம்பிக்கையை வருவிப்பதோ பூரணப்படுத்துகிறது; அந்த நம்பிக்கையினாலே தேவனிடத்தில் சேருகிறோம்"

(எபி.7:18,19). புதிய பிரமாணம் அதிக நம்பிக்கையை நம்மில் ஏற்படுத்துகிறது. அது விசுவாசத்தின் பிரமாணம் என்று அறிகிறோம். விசுவாசிக்கிறவன் பதறான். விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் அது பலிக்கும் வித்தியாசமே இல்லை. அந்த விசுவாசத்தினாலே தேவனிடத்தில் சேருகிறோம். பழையபிரமாணம் ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை ஆனால் புதிய உடன்படிக்கையானது அதிக நன்மையான நம்பிக்கையை நம்மிலே ஏற்படுத்துகிறது. இதினிமித்தமாக பழைய ஏற்பாடு அதாவது நியாயப்பிரமாணம் முழுமையாக மாற்றப்பட்டது.

ஆனபடியினாலே தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்றார் (யோவா.8:32). எது சத்தியம்? அவருடைய வசனமே சத்தியம். அந்த சத்தியத்தையும் அவரையும் அறிகிற அறிவிலே ஒவ்வொருவரும் வளர்ச்சியடைய வேண்டும். என்னைக் கண்டவன் பிதாவைக்காண்கிறான் என்கிறார். கிறிஸ்துவையும் அவருடைய வசனத்தையும் ஒருவன் அறியாமல் பிதாவை எப்படி அறிந்துகொள்ளமுடியும். தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக தம்மை வெளிப்படுத்த சித்தமானார். ஆகையால் பிதாவாகிய தேவன் அவரை முத்திரித்திருக்கிறார். அந்த இயேசுகிறிஸ்துவானவர் மூலமாக கிபையையும் சத்தியத்தையும் அறிந்து இரட்சிக்கப்பட பிரயாசப்படவேண்டும். சுயமுயற்சியினால் அநேகர் இரட்சிக்கப்பட முயலுகின்றனர். சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது எனவேதம் போதிக்கிறது. தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது. நீங்கள் இரட்சிக்கப்படவேண்டுமானால் முதலாவது உங்களை கர்த்தருக்கு ஒப்புக்கொடுங்கள். அவர் "தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" (எபி.7:25). மேலும் "நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது" (ரோம.6:14).

"இந்தப் பிரமாணத்தின்படி நடந்து வருகிறவர்கள் எவர்களோ, அவர்களுக்கும், தேவனுடைய இஸ்ரவேலருக்கும், சமாதானமும் இரக்கமும் உண்டாயிருப்பதாக" (கலா.6:16). அதாவது கிறிஸ்துவானவர் உண்டாக்கின புதுஉடன்படிக்கையின் பிரமாணத்திற்கு செவிகொடுங்கள். அந்த பிரமாணம் ஜீவனுள்ள பிரமாணம், நித்தியமான பிரமாணம், அந்த பிரமாணத்தின்படி நடக்கிறவர்களுக்கு கிறிஸ்து இரட்சகராயிருக்கிறார். தமது புதுஉடன்படிக்கையின் இரத்தத்தினாலே அவர்களை பாவமற கழுவி சுத்திகரித்து பரிசுத்தப்படுத்துகிறார். அவர் மூலமாக கொடுக்கப்பட்டுள்ள கிருபையுள்ள வசனத்துக்கும் சத்தியத்திற்கும் உங்களை அர்ப்பணியுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கின்றோம்.

# பரலோகத்திற்கு ஏன் ஒரே ஒரு வழி மாத்திரமே உண்டு

## Why There Is Only One Way To Heaven

*J.C.Choate*

மத உலகில் "பரலோகத்திற்கு பல வழிகள் உள்ளன", "நாம் அனைவரும் பல்வேறு வழிகளில் பயணம் செய்கிறோம், ஆனால் நாமனைவரும் ஒரே இடத்திற்குச் செல்லவே முயற்சிக்கிறோம்" இன்னும் இது போன்ற பல கூற்றுகளை நாம் அடிக்கடி கேள்விபடுகிறோம். குறிப்பாக இதைக் குறித்து நீங்கள் விடாது சிந்திப்பீர்களென்றால் பூமியிலே இந்த கூற்று நல்லதே, ஆனால் வேதாகம போதனைக்கு இது முற்றிலும் புறம்பானது.




வேதாகமம் பரலோகத்தைப் பற்றியும், அதன் எல்லா அழகைப் பற்றியும், வரப்போகிற உலகத்தில் கர்த்தருடைய ஜனங்களுக்காக அது எவ்வாறு ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது என்பது பற்றியும் சொல்லுகிறது. கிறிஸ்து, "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன், ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன் நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்தில் நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" (யோவா.14:1–3) என்றார். ஆனபடியினால், கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டுள்ளோர்களும் அவர் ஆயத்தம்பண்ணியிருக்கிற பரலோகத்தில் நம்பிக்கை கொண்டுள்ளோர்களும் நிச்சயமாகவே அங்கு செல்ல விரும்புவார்கள். ஆனால் கேள்வியானது, நாம் அங்கே எப்படிச் செல்ல முடியும்? அங்கு செல்ல ஒரே ஒரு வழி மட்டுமே உள்ளதா, அல்லது பல வழிகள் உள்ளனவா? என்பதே. மீண்டும் இயேசு, "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவா.14:6) என்றார். கவனியுங்கள் இயேசுவே வழி, பிதாவினிடத்தில் செல்லுவதற்கு ஒரே வழி அவரே, கிறிஸ்துவினாலே அல்லது கிறிஸ்துவின் மூலமாய் மட்டுமே ஒருவன் பிதாவினிடத்திற்குச் செல்ல முடியும். பிதாவினிடத்தில் செல்ல பல வழிகள் இருந்திருக்குமானால், பிறகு கிறிஸ்து ஒரே வழியாக இருந்திருக்கமாட்டாரே.

இயேசு தம்மை நல்ல மேய்ப்பராகவும், கிறிஸ்தவர்கள் ஆடுகளாகவும், சபை ஆட்டுத்தொழுவமாகவும் இருக்கிறதாகப் படம்பிடித்துக் காட்டுகிறார்.

இப்பொழுது வாசலைப் பற்றி கிறிஸ்து என்ன சொல்லுகிறாரென கேளுங்கள்; "நானே ஆடுகளுக்கு வாசல் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவா.10:7). இயேசு தொடர்ந்து விளக்கும் வண்ணமாக, "நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான்" (யோவா.10:9) என்கிறார். மேலும் அவர் "மெய்யாகவே, மெய்யாகவே, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆட்டுத் தொழுவத்துக்குள் வாசல் வழியாய்ப் பிரவேசியாமல், வேறுவழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான்" (யோவா.10:1) என்கிறார். வேறு வார்த்தைகளில், அவர் ஆட்டுத்தொழுவத்திற்கு வாசலாகவும், ஆனால் வேறுவழியாக ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான் என்றும் இயேசு சொல்லுகிறார். ஆனால் முடிவிலே கள்ளர்களுக்கும் கொள்ளைக்காரர்களுக்கும் என்ன சம்பவிக்கும்? அவர்கள் தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி தேவனுக்குக் கீழ்ப்படியாத வரைக்கும் அவர்கள் தேவனுடைய இராஜ்யத்திற்கு அல்லது சபைக்கு அல்லது பரலோகத்திற்கு நுழைவதற்குக் கூட தகுதியற்றவர்களாயிருப்பார்கள். நிச்சயமாக, கர்த்தர் அருளிய வழியை விட்டு வேறு வழியில் பரலோகத்திற்குச் செல்ல ஒருவன் முயற்சித்தால், அந்த மனிதன் நரகத்திலே தள்ளப்படுவான்.

இன்னொரு சமயத்தில், இயேசு தம்மை சூழ்ந்திருந்த ஜனங்களுக்கு, "இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டு பிடிக்கிறவர்கள் சிலர்" (மத்.7:13,14) என்றார். இயேசு ஒவ்வொருவரையும் இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்கும்படி உற்சாகப்படுத்துவதைக் கவனியுங்கள். இந்த இடுக்கமான வாசல் கிறிஸ்துவை, சபைக்குள் பிரவேசிப்பதற்கான வழியை, மேலும் பரலோகத்திற்கச் செல்லும்படி ஒருவன் கடந்து செல்லுகிற வழியைக் குறிக்கிறது. அவர் தொடர்ந்து இடுக்கமான வாசல் வழியாகச் செல்லுகிறவர்கள் பரலோகத்திற்குக் கொண்டு செல்லுகிற நெருக்கமான வழியில் தாங்கள் செல்வதைக் கண்டு கொள்வார்கள் என்றார். இந்தக் காரியத்தில், அங்கே ஒரே ஒரு வாசல் மட்டுமே உண்டு, ஒரே வழி மட்டுமே உண்டு, அந்த வழியே பரலோகத்திற்கு அழைத்துச் செல்லும் வழி. யார் அந்த வழியில் இருப்பார்கள்? கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டிருப்பவர்கள், கர்த்தருக்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்கள், இரட்சிக்கப்பட்டவர்கள், கிறிஸ்தவர்கள், கர்த்தருடைய சபை அங்கத்தினர்கள், தேவ பக்தியுள்ளவர்கள், நீதிமான்களும், பரிசுத்தரும் அத்தோடு கர்த்தரிடத்தில் விசுவாசம் கொண்டிருப்பவர்கள். பரலோகத்திற்குக் கொண்டு செல்லுகிற குறுகலான மற்றும் இடுக்கமான வழியை அல்லாது வேறு வழியில் யாராவது சென்றிருக்கிறார்களென என நம்மால்

கற்பனை செய்யமுடியுமா? ஆகவே கிறிஸ்து மற்றொரு பகுதியைக் குறித்துப் பேசுகிறார். அவர் விரிவான வாசல் வழியாக பிரவேசித்து கேட்டுக்குக் கொண்டுசெல்லுகிற விசாலமான வழியில் பயணம் செய்கிறவர்களைக் குறித்துப் பேசுகிறார். யார் துணிச்சலாக இதில் பயணம் செய்வார்கள்? அதிகமானவர், உலகத்தார், மற்றும் பக்தியற்றவர்களே. அவர்கள் தங்களுடைய சுய வழியைப் பின்பற்றும் காரணத்தினால் கிறிஸ்துவினுடைய அதிகாரத்திற்கு மதிப்பளிக்க மறுக்கிறவர்களாயிருக்கிறார்கள். மனிதனால் உருவாக்கப்பட்ட சபைகளில் சேருகிறவர்கள், மனிதருடைய நாமங்களைத் தரித்திருக்கிற சபையில் சேருகிறவர்கள், தங்களுடைய விருப்பத்தின்படி ஆராதிக்கிறவர்கள், இன்னும் இதுபோன்ற காரியங்களைச் செய்கிறவர்கள் தான் விசாலமான வழியே செல்லுகிறவர்கள். அவர்கள், வஞ்சிக்கப்பட்டவர்களும் மற்றவர்களை வஞ்சிக்கிறவர்களும் ஆவர். அவிசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் இந்தக் கூட்டத்தில் இருப்பார்கள். ஆனால் இந்தப் பாதை அல்லது வழி எங்கே கொண்டு செல்லுகிறது? இது நித்திய அழிவிற்குக் கொண்டு செல்லுகிறது. ஐயோ, அநேகர் நேர்மையாகவும் உண்மையாகவும் இருப்பார்கள். அவர்கள் மிகுந்த மத வைராக்கியத்துடன் எல்லாவற்றிலும் சரியாக இருப்பார்கள். ஆனால் அவர்கள் விசாலமான வழியில் பயணிப்பதால் அவர்கள் இழந்துபோனவர்களாய் இருப்பார்கள்.

என்னுடைய நண்பரே, ஒரு பெரிய தலைநகருக்குக் கொண்டு செல்லும் சாலைகள் பல இருக்கலாம், ஆனால் ஒரே ஒரு வழியில் மட்டுமே நீங்கள், பயணம் செய்ய வேண்டுமென யாரோ ஒருவர் உங்களோடு ஒப்பந்தம் செய்திருந்தால், நீங்கள் இன்னொரு வழியை தெரிந்துகொண்டால் என்ன நடக்கும்? நீங்கள் சிக்கலில் மாட்டிக்கொள்வீர்களென நான் அஞ்சுகிறேன். அதைப்போலவே, கிறிஸ்து வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் படைத்தவராயிருக்கிறார் (மத்.28:18). நாம் அந்த அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்து கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற கட்டளைகளைக் கைக்கொண்டு நடக்கும்போது, நாம் அந்த ஒரே வழியைக் கண்டு கொள்வோம். நாம் கர்த்தர் குறிப்பிட்டிருக்கிற வழியில் பயணம் செய்ய வேண்டும்.

பரலோகத்திற்கான வழியைப் பற்றிபேசுகையில் நாம் மனித காரணங்களுக்கேற்ப அதை ஏற்படுத்திக் கொள்ள விரும்புவதே நம்முடைய பிரச்சனையாயிருக்கிறது. நாம் ஒரு நகரத்திற்கு பல சாலைகள் உள்ளன, அவைகள் எல்லாமே அந்த ஒரே நகரத்திற்கே கொண்டு செல்லுகின்றது, ஆகவே ஆவிக்குரிய காரியங்களிலும் நிச்சயமாக இதுவே உண்மை என காரணம் காட்டுகிறோம். மனுஷருடைய நம்பிக்கையிலும், மனித சபைகளிலும், இன்னும் பலவற்றிலும் மற்ற வழிகள் இவ்வாறே தோற்றமளிக்கலாம், ஆனால் இவைகளைல்லாம் பரலோர்கத்திற்குக்குரிய வழிகள் அல்ல. ஒருவரும் மனிதன் உருவாக்கிய வழிகளின் மூலமாகவும் மனிதன் ஏற்படுத்திய அமைப்புகளின்

வழியாகவோ பரலோகத்திற்குச் செல்ல முடியாது. உண்மையான வழியைக்கண்டு கொள்ள நாம் நம்முடைய வேதாகமத்தை வாசிக்கவேண்டியது நமக்கு அவசியமாயிருக்கிறது. கிறிஸ்து, "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் ......" (மத்.15:9) என்றார். மீண்டும் கிறிஸ்து, "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்தில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட் அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்" (மத்.7:21–23) என்றார். வேதவாக்கியங்கள் முழுவதும். இதுபோன்ற கூற்றுகள் டஜன் டஜனாக இருக்கின்றன. தேவனுக்குக் கீழ்ப்படியாமல், நம்முடைய வழியில் நடந்து, மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சபைகளில் சேர்ந்து, மனிதால் ஏற்படுத்தப்பட்ட நாமங்களைத் தரித்துக்கொண்டு, நம்முடைய இஷ்டம்போல் ஆராதனை செய்து, நாம் எவ்வழியிலெல்லாம் பயணம் செய்யவிரும்புகிறோமோ அவைகளில் பயணம் செய்து, ஆனால் அதே சமயம் பரலோகத்திற்குச் செல்கிறோம் என்று ஒரு நிமிடம் இப்போது சிந்திப்பீர்களா? நாம் இவ்விதமான காரியங்களை நினைத்துக் கொண்டிருப்போமானால், நிச்சயமாகவே நாம் தவறிழைத்திருக்கிறோம். சவுலைப் பாருங்கள். அவர் மிகவும் பக்தியுள்ளவராக இருந்தார். அவர் தம்முடைய மதத்திற்காக வைராக்கியமுள்ளவராக இருந்தார். அவர் கர்த்தருடைய சபையைத் துன்புறுத்தினாலுங்கூட நல்மனசாட்சியுடையவராக இருந்தார். ஆனால் அவர் தான் தவறு இழைத்தவன் என கண்டுகொண்டார். இதன்காரணமாக அவர் தன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தபோது அவர் இரட்சிக்கப்பட்டார் (அப்.9 மற்றும் 22). ஆனால் கொர்நேலியுவும் அவனுடைய குடும்பத்தாரைப் பற்றியகாரியமென்ன? அவர்கள் நல்ல ஜனங்கள். அவர்கள் தரித்திரர்களுக்கு தானதர்மம் செய்து எப்போதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்கள். இருந்தாலும், பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டபிறகு, அவர்கள் இரட்சிக்கப்படும்படிக்கு ஞானஸ்நானம் பெற கட்டளை பெற்றிருந்தார்கள் (அப்.10). பரலோகத்திற்கு கொண்டுசெல்லும் வழி ஒரே வழி என்ற உண்மைக்கு ஆதாரமாக வேதவாக்கியங்களில் பல திருஷ்டாந்தங்கள் உள்ளன.

என்னுடைய நண்பரே, இதைக் குறித்து சிந்தியுங்கள். வேதாகமம், ஒரே தேவனும், ஒரே கர்த்தரும் அல்லது இரட்சகரும், ஒரே பரிசுத்த ஆவியானவரும், ஒரே சரீரம் அல்லது சபை, ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம் மேலும் ஒரே

நம்பிக்கை எனப் போதிக்கிறது (எபே.4:1–6). வேதாகமம், ஒரே சுவிசேஷம் அல்லது இரட்சிக்கப்பட ஒரே வழி உண்டென்று நமக்கு போதிக்கிறது. கர்த்தர் ஒருவரே இரட்சகர், இரட்சிக்கப்படும்படிக்கு ஒரே காரியத்தைச் செய்ய நம்மெல்லாருக்கும் கட்டளையிட்டிருக்கிறார். எல்லாரும் அவருக்குச் செவிகொடுத்து (மத்.17:5) அவரை விசுவாசித்து (யோவா.8:24), தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி (லூக்.13:3), கிறிஸ்து தேவனுடைய குமாரரென்று அறிக்கையிட்டு (மத்.10:32), பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறும்படிக்கு (மாற்.16:16; அப்.2:38) கட்டளையிடப்பட்டிருக்கிறோம். கிறிஸ்து முழு உலகத்திற்கும் மேலும் உலகத்திலுள்ள சர்வசிருஷ்டிக்குங் கூட ஒரே சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட வேண்டுமென கட்டளையிட்டிருக்கிறார் (மாற்.16:15,16). கர்த்தர், தாம் கட்டினதும், அதற்காக தாம் மரித்து தம்முடைய சுயஇரத்தத்தினால் சம்பாதித்து, தாம் தலையாகவும், ஒரு நாளில் அதற்காக, திரும்பவும் வருகிறவருமாகிய தம்முடைய சபையாகிய அந்த ஒரே சபையில் இரட்சிக்கப்படுகிறவர்களை சேர்க்கிறார் (அப்.2:47; மத்.16:16; எபே.5: அப்.20:28). தேவன் அனைவரும் தம்மை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள விரும்புகிறாரென வேதாகமம் போதிக்கிறது (யோவா.4:24). ஆனபடியினால் அனைவரும் வாரத்தின் முதல் நாளிலே அப்பம்பிட்கும்படிக்கும், தேவனுடைய வார்த்தையைக் கற்றுக்கொள்ளவும், ஜெபிக்கவும், தங்களுடைய வரவுக்குத் தகுந்தவற்றைக் கொடுக்கவும், தேவனைத் பாடித் துதிக்கவும் கூடி வரவேண்டியவர்களாயிருக்கிறோம் (அப்.20:7: 2தீமோ.2:15, அப்.2:45; எபே.5:19). தேவன் தம்முடைய ஜனங்களை, எல்லாவற்றையும் கிறிஸ்துவின் நாமத்தில் செய்யவும் (கொலோ.3:17). அதன்படியே அனைவரும் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொள்ளவும் (அப்.11:26). அனைவரும் விசுவாசமுள்ள கிறிஸ்தவ ஜீவியம் ஜீவிக்கவும் (வெளி.2:10) வேண்டுமென விரும்புகிறார்.

நாம் விசுவாசிப்பதற்கும், கீழ்ப்படிவதற்கும் நம்மனைவருக்கும் ஒரே வேதாகமமே உண்டு. நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தால், அவரிடத்தில் கொண்டுள்ள விசுவாசத்தில் நிலைத்திருந்தால், நாம் செல்லுவதற்கு ஒரே பரலோகமும், பாவிகளுக்கும் அவிசுவாசிகளுக்கும் ஒரே நரகமும் உண்டு (மத்.25:46). இப்போது, மேற்கூறிய அனைத்தும் உண்மையாயிருக்கிறது. நீங்களாகவே வேதவாக்கியங்களை வாசித்து, கற்றுக்கொண்டு பரலோகத்திற்குச் செல்ல எப்படி ஒன்றுக்கு மேற்பட்ட வழிகள் இருக்க முடியும்? என்பதைக் கண்டு கொள்ளுங்கள். ஆம், பரலோகத்திற்குச் செல்ல ஒரு வழி உண்டு, ஆனால் ஒரே ஒரு வழி மட்டுமே உண்டு, அது கர்த்தருடைய வழி. அதை ஏற்றுக்கொள்ள நாம் ஞானமுடையவர்களாயிருப்போம், அத்தோடு பரலோகத்திற்குக் கொண்டு செல்லுகிறதான அந்த வழியில் பயணம் செய்ய கர்த்தர் நம்மை எதைச் செய்யும்படி விரும்புகிறாரோ அதையே செய்வோம். இந்த வழியைத் தவிர நாம் செல்லுவதற்கு

வேறே வழியில்லை. ஞானமுள்ள மனிதன், "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்" (நீதி.14:12) என்றான்.

நீங்கள் எந்த வழியில் பயணம் செய்கின்றீர்கள்? விசாலமான வழியிலா அல்லது குறுகலான வழியிலா? கேட்டுக்குப் போகிற வழியிலா அல்லது பரலோகத்திற்குப் போகிற வழியிலா? ஒரே நேரத்தில் நீங்கள் இருவழிகளில் நடக்கமுடியாது. கிறிஸ்து இரு எஜமான்களுக்கு ஒருவனும் ஊழியஞ்செய்ய முடியாது என்றார் (மத்.6:24). நாம் ஒருவனை சேவித்து இன்னொருவனைப் பகைப்போம் (மத்.12:30) என்றார். ஆனடிபயினால் இது ஒருவன் எவ்வழியைத் தெரிந்துகொள்வான் என அவனவனுடைய தீர்மானத்திற்கு விடப்பட்டுள்ளது. நாங்கள் கிறிஸ்துவையும் பரலோகத்திற்குக் கொண்டு செல்லும் வழியையும் தெரிந்துகொள்ளும்படி வேண்டிக்கொள்கிறோம்.

## வேதஅறிவுப்போட்டி எண் 75-ன் விடைகள்

1. சமாதானத்தை, அது -எசே.7:25
2. நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்கு - 1பேது.2:23
3. உன் பிள்ளைகளை - ஓசி.4:6
4. நரகத்திலே - 2பேது.2:4
5. திரள்திரளாய் - யோவே.3:14
6. இடறல் ஒன்றுமில்லை - 1யோவா.2:10
7. பெரிதாயிருக்கும் - ஆகாய்2:9
8. இயேசுகிறிஸ்து - வெளி.1:6
9. வருத்தப்படுத்துவேன் - செப்.1:17
10. தங்களுக்காக மரித்து எழுந்தவருக் கென்று - 2கொரி.5:15



### உலகிலேயே மிகப் பெரிய பைபிள்

கி.பி.1930 -ம் ஆண்டு இந்த பைபிள் உருவாக்கப்பட்டது. இது திறந்து வைத்து இருக்கும்போது இதன் உயரம் 3.5 அடியும் அகலம் 8.5அடியும் இருக்கும். சுமார் 450 கிலோ எடைகொண்டது. இதை ஒரு பெரிய கண்ணாடிபெட்டியில் வைத்து பாதுகாத்துவருகிறார்கள்.

*-M.Rajamani*

## வேதஅறிவுப்போட்டி எண் 75-ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| P. அலிஸ்மேரி | -வத்தலக்குண்டு |
| N. ஜான்செல்லையா | -செட்டிபாளையம் |
| E. ஜோசப் தேவதாஸ் | -நாகமலை |
| C. ஜாய் கிறிஸ்டினா | -நாகமலை |
| S. சாம்பிச்சை | -நாகமலை |
| S. லூர்துராணி | -ஆணையூர் |
| S. வனிதா | -மதுரை |
| J. ஜாய் வாசுகி | -கோவை |
| T. பவுல் | -செட்டிபாளையம் |
| A. ஆனந்த் | -நாகமலை |
| P.S. லலிதா பிரேமகுமாரி | - மதுரை |
| J. நிர்மலா ஜான் | -மதுரை |
| K. சண்முகம் | -க.பரமத்தி |
| S. பிரதீபா | -கோபாலபுரம் |
| R. ஆனந்தகுமார் | -கோபி |
| K. மோகன் | -குமாரபாளையம் |
| N. விஜயானந்த் | -குமாரபாளையம் |
| Ira. எதிராசன் | -சங்ககிரி |
| Sis. குளோரி பவுல்சா் | -சென்னை |
| S. கிரேஸ்மேரி | - |
| P. சரவணகுமார் | -புதுப்பாளையம் |
| P. உஷா | -உத்தமபாளையம் |
| G. பூங்கோதை | -கோபி |
| Mrs. ஜாஸ்மின் வின்சென்ட்ராஜ் | -மதுரை |
| D. ஏசுதாஸ் | -சித்தூர் (A.P) |
| S. ஆனந்தராஜ் | -ஈரோடு |
| C.H. வித்யா ராணி | -சென்னை |
| G.P. ஏசையன் ராஜ் | -கோபி |
| K. சென்னியப்பன் | -வெள்ளகோவில் |
| N. கமலவேணி | -சென்னை |
| S.R. பெரியசாமி | -சேலூர் |

# நான் எனது பெற்றோரின் மதத்தையே பின்பற்றுவேன்
# I will just Follow the Religion of my Parents

**பெண்கள் பகுதி**

*-Betty Burton Choate*



இன்று உலகில் வேறுபட்ட மதங்களை – கிறிஸ்தவ சமயம், யூதசமயம், இந்துமதம், புத்தமதம், இஸ்லாமிய மதம், டாவோயிசம், ஜொராஸ்டரேனிசம், கத்தோலிக்க சமயம், பிரொட்டஸ்டண்டு –– என காண்கின்ற வேளையில் இவற்றில் எதைப் பின்பற்றுவது என்ற எண்ணம் முழுவதும் நசுக்கப்படுகின்றது. ஒவ்வொரு சமயமும் வெவ்வேறு தெய்வங்களை, வெவ்வேறு மதசாஸ்திரங்களை, வேறுபட்ட ஆராதனை முறைமைகளை, ஒருவனுடைய வாழ்வின் பாவ பரிகாரத்திற்கு வேறுபட்ட வழிகளைக் காட்டுகிறது. எவ்வாறு ஒரு மனிதன் எந்த சமயம் தேவனிடத்திலிருந்து வந்தது, எது சத்தியத்தை மறைத்து வைப்பதற்கு சாத்தானால் உருவாக்கப்பட்ட போலியானது என்பதை அறிய முடியும்?

இந்த குழப்பமான கேள்விகளுக்குத் தப்பித்துக் கொள்ளும்படிக்கு, அதிகமான ஜனங்கள் " நான் எனது பெற்றோரின் மதத்தையே பின்பற்றுவேன். அவர்களுக்கு எவையெல்லாம் நல்லதாகயிருந்ததோ அவைகள் எனக்கும் நல்லதாகவேயிருக்கும் " எனத் தீர்மானிக்கின்றனர்.

ஆனால், ஒருவருடைய பெற்றோர் பின்பற்றுகின்ற ஏதோஒன்றோடு திருப்தியாயிருக்க அது பாதுகாப்பானதா? சத்தியத்தை ஒருபோதும் ஆராய்ந்து பார்க்காதபடிக்கு அவர்களுடைய பெற்றோர் மற்றும் பெற்றோருடைய பெற்றோர் பின்பற்றினவைகளையும் கூட பின்பற்றுவது தவறானதாக இருக்காதா?

ஆபிரகாமுடைய தகப்பனும் அவனுடைய தாத்தாவும் விக்கிரகாராதனை செய்தார்கள் என வேதாகமத்தில் நாம் காண்கிறோம், ஆனால் ஆபிரகாம் பரலோகத்தின் தேவனை ஆராதித்து சேவிக்கும்படிக்கு குடும்ப சமய சடங்குகளை விட்டு விலகினான் (யோசு. 24:2). இன்னொரு எடுத்துக்காட்டு, அப்போஸ்தலனாகிய பவுலும் கூட விலகினான். அவன் அப்போஸ்தலர் 23:1 ல் "சகோதாரே, இந்நாள் வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நல்மனச்சாட்சியோடே தேவனுக்குமுன்பாக நடந்து வந்தேன் என்று சொன்னான்" மேலும் மெய்யாகவே, நானும் நசரேயனாகிய ,இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்க வேண்டுமென்று

நினைத்திருந்தேன் " ( அப்.26:9) என்றான். ஆனால், அவன் தன்னுடைய பிதாக்களின் மார்க்கம் தேவனிடத்திலிருந்து அனுப்பப்பட்டவராகிய மேசியாவாகிய கிறிஸ்துவுக்கு நேராக வழிநடத்தி வந்தது என்று கற்றுக் கொண்டபோது, அவன் யூதசமயத்தை விட்டு விலகி கிறிஸ்தவனாக மாறினான்.

நீதிமொழிகள் 14:12 "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்" என்று எச்சரிக்கிறது. நாம் ஒவ்வொரும் தனித்தனியான ஆத்மாவாகவும், நாம் வாழும் வாழ்க்கை முறையில் தேவனுக்கு உத்தரவாதியாகவும் இருக்கிறோம். அநேகர் வீணாக சில மத அமைப்புகளைப் பின்பற்றும்படிக்கு, அந்த நம்பிக்கைக்குள்ளாக தங்களை தாங்களே ஏமாற்றிக்கொண்டிருக்கின்றபோது இது போதுமானதல்ல. இயேசு நியாயத்தீர்ப்பின் நாளிலே, "அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத்துரத்தினோம் அல்லவா? என்பார்கள் . அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன் " என்றார். அடுத்த வசனம்"...நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் **கேட்டு**, இவைகளின் படி **செய்கிறவன்** எவனோ..." என்ற கூற்றுடன் ஆரம்பிக்கிறது.

நாம் போதிக்கப்பட்டிருக்கிறோம்," வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பியோஜன முள்ளவைகளாயிருக்கிறது"(2 தீமோ.3:16,17) என போதிக்கப்பட்டிருக்கிறோம்.

ஏனென்றால் வேதாகமம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது மேலும் இது தேவபக்திக்கடுத்த எல்லா விஷயங்களிலும் நம்மை வழிநடத்த உத்தேசிக்கிறது, நாம் உந்தப்படுகிறோம், "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு"(2 தீமோ.2:15).

இப்பகுதிகளிலிருந்து, நாம் நம்முடைய முற்பிதாக்களின் சமயத்தை குருட்டுத்தனமாகப் பின்பற்றுவதற்கு இடம்கொடுக்கக்கூடாது எனக்காண்கிறோம்,ஏனென்றால் அவர்கள் ஒருவேளை தங்களுடைய பெற்றோர்களின்சமயத்தைக்கூட பின்பற்றிக்கொண்டிருந்திருக்கலாம். மாறாக, நாம் நம்முடைய ஆத்துமநன்மைக்காகவேபோதுமான சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும் நம்முடைய மாதிரியின் மூலம் நம்முடைய சந்ததியின் ஆத்துமாக்களும் பல்வகைப்பட்ட சமயங்களையும் புனிதநூல்களையும் நமக்காக படிப்பதற்கு முற்படுவார்கள். நாம் சத்தியத்தை தேடவேண்டும்,

அதைக்கண்டுபிடிக்கும்போது, குடும்பப் பாரம்பரியங்களையும் மத நம்பிக்கைகளையும் விட்டு விலக வேண்டியிருந்தாலும்கூட சத்தியத்தைப்பின்பற்றும்படிக்கு தைரியம் கொண்டிருப்போம்.

இயேசு சத்தியத்தை தேடுவது சம்பந்தமாக இந்த உவமையைக் கூறினார்:"...பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது, அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய் தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்"(மத்.13:45,46). இந்த மனிதன் விலையுயர்ந்த முத்தை சொந்தமாக்கிக் கொள்ளும்படிக்கு தனக்குண்டான எல்லாவற்றையும் விட்டுவிட்டான் . சத்தியம் முத்தைக் காட்டிலும் விலையுயர்ந்தது, மேலும் நாம் நமக்காக சமய சத்தியத்தைக் கொள்ளும்படிக்கு எதையும் இழக்கவும் தேவையான எந்த மாற்றத்தையும் உருவாக்கவும் ஆயத்தமாக இருக்கவேண்டும்.

நம்முடைய பெற்றொர்கள் நம்பி பின்பற்றின சமயம் அவர்களுடைய சுய அறிவுக்கேற்றபடியும் சந்தர்ப்பத்திற்கேற்றபடியும் காணப்பட்டது ஒருவேளை அவர்கள் சரியாக இருந்திருக்கலாம் ஆனால், அவர்கள் தவறானதைத் தெரிந்து கொண்டார்கள், நாம், தனித்த ஆத்துமாக்களாக, நமக்கு முன்பாக கண்மூடித்தனமாகப் பின்பற்றும்படிக்கு இடங்கொடுக்க முடியாது.உண்மையான உறுதியான ஆராய்ச்சியோடு, தேவனுடைய சத்தியத்தைக் கண்டுகொள்ளும்படிக்கு தேவனுடைய உதவிக்காக ஜெபத்துடன் இணைந்து, நாம் தவறானவற்றிலிருந்து சத்தியத்தை பகுத்துணர்ந்து கொள்ள முடியும். தேவனை நோக்கி நமக்காகவும் , எல்லாவற்றிற்கும் மேலாக சத்தியத்திற்கு அர்ப்பணிக்கும்படிக்கு இது நம்முடைய கடமையாயிருக்கிறது.

நீங்கள் இது தேவனுடைய சத்தியம் என உறுதிசெய்து கொள்ளுவதற்கு ஆராய்ந்து பார்க்காமலே உங்களுடைய பெற்றோரின் சமயத்தைப் பின்பற்றுவதுடன் திருப்தியடைய தீர்மானித்திருப்பீர்களானால், உங்களுடைய ஆத்துமாவின் நித்திய நன்மையை இழந்து கொண்டிருக்கிறீர்கள். திரும்பிச் சென்று மீண்டும் இந்த ஐயப்பாட்டினை மறு–ஆய்வு செய்யுங்கள். சத்தியத்தின் மூலம் ஞானம் பெற்ற சரியான நிலையை உருவாக்குங்கள்.


ஒ
ரே
வ
ழி

'ஒரேவழி' வேதபாடம்

The Master Course படிக்க விரும்புகிறவர்கள் இன்றே
தபால் செலவுக்காக ரூபாய்15–ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று Certificate பெற்றுக்கொள்ளுங்கள்
வயது: 20 க்கு மேல்.

**Batlagundu Bible College**
**Post Box 5, Batlagundu-624 202**
**S.INDIA**

# பயப்படாதே - Fear Not

*-J.Glory Arjunan*



புதிய ஆண்டு எவ்வாறு இருக்குமோ? பழைய ஆண்டின் வருத்தங்களும், சஞ்சலங்களும் தொடருமோ என பயந்து, புதிய ஆண்டில் தேவ ஆசீர்வாதம் கிடைக்காதோ என ஏங்கிக் காத்திருக்கும் சகோதரிகளே பயப்படாதீர்கள்.

கத்தரை தெய்வமாகக் கொண்டிருக்கும் சகோதரிகள் பயப்படத் தேவையில்லை. அண்டசராசரங்களை உண்டாக்கி அனைத்தும் தன் தன் வேலைகளை தேவசித்தத்தின்படி தவறாமல் செய்து கொண்டிருக்கப்பண்ணுகின்ற தேவன் உங்களையும் என்னையும் வழிநடத்துவது அதிகநிச்சயமல்லவா? ஆபிரகாம் கர்த்தரை விசுவாசிக்கிற அனைவருக்கும் தகப்பன் அவனை அருமையாக நடத்தினதேவன் அவன் விசுவாசித்த வண்ணமாய்,விசுவாசிக்கிற ஒவ்வொருவரையும் அவ்விதமே நடத்தவல்லவர். புத்தாண்டுக்குள் நுழைய இருக்கிற நாம் நம்மை சீர்தூக்கிப்பார்த்து ஆசீர்வாதங்களை இழந்து போகாதிருப்போமாக!

ஆபிரகாமை நோக்கி,...நீ பயப்படாதே, நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகாபெரியபலனுமாயிருக்கிறேன் என்றார்(ஆதி.15:1). இவ்விதமான வாக்குத்தத்தினை பெற அவனிடம் இருந்தது விசுவாசமட்டுமல்ல,நற்கிரியையும்கூட. ஆம் ,ஆதி.14:22ல் சோதோம் ராஜாவை பார்த்து அவன் கூறியதை கவனியுங்கள். " ....நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும், உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன்" என்றான். அப்படியென்றால், இவன் பிறனுக்குள்ள எதையும் இச்சிக்கவில்லை என்றுதானே பொருள். அன்பு சகோதரிகளே,ஸ்திரீகளாகிய நாம் இவ்விஷயத்தில் பெலவீனர்கள் என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் நமது ஆதித்தாய் ஏவாளிடம் இச்சிக்கிற குணமிருந்ததே. நாமும்கூட அநேக நேரங்களில் நவநாகரிக உலகின் பொருட்களையோ, அல்லது பிறருக்குள்ள ஏதோ சிலவற்றை இச்சித்து இப்பொருள் நமக்கிருந்தால் நன்றாக இருக்கும் எனயோசிக்க ஆரம்பித்துவிடுகிறோம். பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருங்கள் என்ற கட்டளையை மறக்க கூடாது. அது பொருட்களாயிருந்தாலும் சரி,வேறுஎதுவாயிருந்தாலும் சரி. இச்சையை தவிர்க்கும் போது நம் தேவன் நமக்கு கேடகமும், மகாபெரியபெலனுமாயிருப்பார் என்பது அதிக நிச்சயம்.

ஆபிரகாமின் தேவன்,ஈசாக்கின் தேவனுமல்லவா! ஈசாக்குக்கு கர்த்தர் தரிசனமாகி "...பயப்படாதே, நான் உன்னோடேகூடஇருந்து என் ஊழியக்காரனாகிய ஆபிரகாமினிமித்தம் உன்னை ஆசிர்வதித்து, உன் சந்ததியைப் பெருகபண்ணுவேன் என்றார் "(ஆதி.26:24) . ஈசாக்கு இவ்வாசீர்வாத வாக்குத்தத்தை எச்சூழலில் பெற்றான்? இவனுடைய வேலைக்காரருக்கும் கேராரூர் மேய்ப்பருக்கும் இடையே துரவு வெட்டின விஷயத்தில் பலமுறை வாக்குவாதம் ஏற்பட்டது. ஈசாக்கோ வாக்குவாதம் பண்ணாதபடி அவ்விடத்தைவிட்டு பெயர்ந்து வேறொரு இடத்திற்கு சென்ற போது கர்த்தர் அவனுக்கு தரிசனத்தில் இந்த ஆசீர்வாதத்தை வாக்குப் பண்ணினார்.அநேக சமயங்களில் தேவனை அறியாத சிலரோடு நாமும் வாக்குவாதம் பண்ணவேண்டியசூழ்நிலை உருவாகிவிடுகின்றது .வேதம் 'வாக்குவாதம் எழும்பும் முன் அதை விட்டு விடு ' என்று கூறுகிறது . ஆம்,நாமும் இவ்விதமாக அதை விட்டு விலகும்போது நம்மைஆசீர்வதித்து நம் சந்ததியைப் பெருகப்பண்ணுவார். எனவே அன்பு சகோதரிகளே, கர்த்தரை அறிந்துள்ள நாம் மற்றவர்களோடு வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்போமாக!

யோசுவாவை பார்த்து மோசே, கர்த்தர்தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார், அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கை விடுவதுமில்லை; நீ **பயப்படவும்** கலங்கவும் **வேண்டாம்.** என கர்த்தருக்குள் திடப்படுத்தினான். சகோதரிகளே, நம்மை எப்போதும் கலங்கப் பண்ணுகிறவன் பிசாசு தான். நம்முடைய வாழ்வில் எத்தனையோ கோணங்களில் பிசாசு நம்மைக் கலங்கப்பண்ணுகிறவனாய் இருக்கிறான் என அங்கலாயிக்கிறீர்களா?, வேதம், பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான் எனக் கூறுகிறது. ஆம், நாம் தைரியமாய் நின்று பிசாசுக்கு எதிர்த்து நிற்போம். உலகின் எக்காரியமும் நம்மை மேற்கொள்ளவிடாது எதிர்த்து நிற்போமானால் நிச்சயமாய் பிசாசு நம்மை விட்டு ஓடிப்போவான். பிசாசு கொண்டுவருகிறதான சோதனைகளைக் கண்டு நாம் பயப்படவேண்டாம், யூதாசுக்குள் சாத்தான் புகுந்ததுபோல் நமக்குள்ளும் புகுந்துவிட இடமளிக்காமல் கர்த்தருடைய ஆவியானவருக்கு இடமளிக்கும் போது நிச்சயமாய் நாம் பயப்பட வேண்டிய அவசியமில்லை. சத்துருவாகிய பிசாசை ஜெயித்து பரம காணாணுக்குள் பிரவேசிப்போம்.

இயேசுவின் கல்லறையைப் பார்க்க வந்த ஸ்திரீகள், இயேசுவின் சரீரத்தைக் காணாமல் கலக்கமடைந்து பயத்துடன் காணப்பட்டனர் ( லூக் 24 : 15). ஏன் தெரியுமா? மாம்சசிந்தையினால் இயேசுவை மரித்தோரிடத்தில் தேடினதால் பயப்பட்டார்கள் அன்பான சகோதரிகளே, இன்று நீங்கள் இயேசுவை மாம்சபிரகாரமாகவே எண்ணிக் கொண்டு இருக்கிறீர்களா? இயேசுவை மரித்தோரிடத்தில் தேடிக்கொண்டிருக்கிறீர்களா? அவர்அப்போஸ்தர்களைப்

பார்த்து உங்களை திக்கற்றவர்களாய் விடேன் உங்களிடத்தில் வருவேன் சத்திய ஆவியாகிய தேற்றரவாளனை உங்களுக்கு தருவேன் என்று கூறினாரே. அவ்வாறு இருக்க, நம்மை தேற்றி ஆற்றி இம்மானுவேலனாக நம்மோடு கர்த்தர் இருக்கும்போது நாம் உலக காரியங்களை கண்டு பயப்பட வேண்டாம்.

கர்த்தராகிய இயேசுவின் பிறப்பின் போது, தேவதூதன் பயப்படாதிருங்கள் -- எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். ( லூக் 2:10) என்றான். **ஆம் இயேசுவின் பிறப்பு நமக்கு சமாதானத்தையும் சந்தோஷத்தையும் உண்டாக்கும் நற்செய்தி , இயேசுவின் மரணம் நமக்கு இரட்சிப்பின் சந்தோஷத்தை உண்டாக்கும் மீட்பின் செய்தி , இயேசுவின் பரமேறிய சம்பவம் நம்மை தேற்றும்படிக்கு தேற்றரவாளனை அனுப்பிய ஆறுதலின் செய்தி, இயேசுவின் இரண்டாம் வருகை நம்மை நித்திய மகிழ்ச்சிக்குள்ளாக்கும் நித்திய செய்தி.** பாருங்கள் ,இயேசுவினிடத்தில் எத்தனை இன்பமுண்டு! அவரிடம் நாம் அன்பு கொண்டிருப்போமானால் வரும் நாட்களைக் குறித்த பயம் நம் மை வாட்டாது."அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்மே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல" என யோவான் 4:18 மிக அழகாய் கூறுகின்றார்.

அன்பான சகோதரிகளே; பயப்படாதேயுங்கள் நம்முடைய உள்ளத்தில் பயமிருக்குமானால் நிச்சியமாவே நாம் இயேசுவினிடத்தில் பூரண அன்பு கொண்டிருக்கவில்லை என்று தான் பொருள்.வருகின்ற ஆண்டிலிருந்தாவது நம்மை சீர்தூக்கிப்பார்த்து கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று வேதாகமத்தின் உதவியுடன் அறிந்து பயத்தை புறம்பே தள்ளி,ஜீவசனத்தைப் பிடித்துக் கொண்டு சுடர்களைப் போல் பிரகாசிப்போம் " நீ பயப்படாதே, நான் உன்னுடைனே இருக்கிறேன்; திகையாதே நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்.(ஏசா 41:10) என்று கர்த்தர் சொல்லுகிறார் கர்த்தருடையவர்களாயிருந்து வரும் புத்தாண்டில் கர்த்தரின் அசீர்வாதத்தை பெறுவோமாக!

## ஜெபியுங்கள்



- புத்தாண்டை கர்த்தர் ஆசீர்வதித்து தரும்படியாக...
- Radio & TV நிகழ்ச்சி மற்றும் கிறிஸ்துவின் வசனம் மாத இதழ் மூலம் அநேகர் கர்த்தருடைய ராஜ்யத்தில் சேர்த்துக்கொள்ளப்பட ...
- ஜனவரி மாதம் நடைபெறவிருக்கும் 25வது கிறிஸ்துவின் வசன வாசகர் கருத்தரங்கிற்காக...
- பதினைந்து மாவட்டங்களில் நடைபெறும் நமது ஊழியங்களுக்காக...



# பிரசங்கியாருடைய குடும்பம்
## The Preacher`s Family

J.C.Choate

கர்த்தர் தம்முடைய சபையில் எந்த விதமான மக்கள் தலைமைத்துவத்தை ஏற்க வேண்டும் என்று விரும்புகிறார் என்பதைப்பற்றி ஆழமாக பார்த்தோம். இது உங்களை கர்த்தருக்கு கீழ்படிந்து கிறிஸ்தவனாக்கி, கிறிஸ்துவின் சபை அங்கத்தினராக்கி, அப்படிப்பட்டத் தலைவர்களில் ஒருவனாக நீங்கள் உங்களை தயார் செய்ய இந்தப் பாடங்கள் ஊக்கப்படுத்தும் என்று நம்புகிறோம்.

நீங்கள் பிரசங்கிப்பதில் ஆர்வமுள்ளவராக இருக்கலாம். அப்படியானால் இப்பொழுது நாம் படிக்கிற பாடங்கள் விசேஷமாக பிரசங்கியார் அவருடைய நோக்கங்கள், பயிற்சி மற்றும் வாழ்க்கை ஆகியவற்றைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. இந்தப் பாடத்தில் பிரசங்கியாருடைய குடும்பத்தைப் பற்றி நாம் சிந்திப்போம்.

அநேக மனிதர்கள் தாங்கள் மிகவும் இளைஞனாக இருக்கும்போதே பிரசங்கிக்க தொடங்குகிறார்கள். உண்மையாகவே ஒருவர் தன்னை தயார் செய்வதற்கும் சரியான பயிற்சி பெறுவதற்கும் இதுவே சிறந்த சமயம். பின்பு வளர்ச்சியடைந்து திருமணமாகி குடும்பமாகி அவர் செய்யும்படி தேர்ந்தெடுத்த இந்த வேலையை செய்ய தயாராக இருப்பார். திருமணத்திற்கு முன்பு பயிற்சி பெறும்போது தன் பெற்றோர்களோடு அவர் வசிக்கலாம். அது அவருக்கு பாதுகாப்பான தனக்கு சொந்தமான மேலும் தன்னை நேசித்து இந்த வேலையை செய்யும்படி உற்சாகப்படுத்துகிறவர்களோடிருக்கிறோம் என்ற உணர்வை கொடுக்கும்.

ஒரு பிரசங்கியார் திருமணம் செய்வதை வேதம் ஒரு போதும் தடைசெய்யவில்லை என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும். எப்போதாவது ஒரு பிரசங்கியார் அவருக்கு விருப்பமானால் திருமணம் செய்ய வேண்டாம் என்று தீர்மானிக்கிறார் அது நல்லது. தனிமையாக இருக்க முடிவு செய்யும் பட்சத்தில் தன்னுடைய வேலைக்கென்று பயன்படுத்தலாம். சுதந்திரமாக பிரயாணம் செய்யலாம். ஒரு குடும்பஸ்தனுக்கு இருக்கிற பொருளாதாரத் தேவைகள் அவனுக்கு இருக்காது. அப்போஸ்தலனாகிய பவுல் திருமணம் செய்து கொள்ளவில்லை. அதோடுகூட தன் காலத்திலிருந்த மக்களையும் அந்த காலத்திலிருந்த கடினமான சூழ்நிலை கருதி திருமணம் செய்து கொள்ள வேண்டாம் என்று சொல்கிறார். இருப்பினும் அவர்கள் திருமணம் செய்து கொள்ள விரும்பினால் செய்து கொள்ளலாம் என்று தன்னுடைய வார்த்தையில் சொல்லியிருக்கிறார் (1கொரிந்தியர் 7:7–9). அநேக பிரசங்கியார்கள் திருமணம்

செய்து குடும்பத்துடன் இருக்கவே தெரிந்துக் கொள்கிறார்கள். இது நம்மை மேலும் பெரிய சிந்தனைக்கு உள்ளாக்குகிறது. பிரசங்கியார் கிறிஸ்தவராகவும் கிறிஸ்துவின் சபை அங்கத்தினராகவும், மீதமுள்ள வாழ்க்கையை கர்த்தருடைய தீர்மானத்தின்படி பயன்படுத்தவும் முன்பு திருமணமாகாத ஒரு பெண்ணை திருமணம் செய்வது அவசியமானது (மத்தேயு 19:9). அந்தப் பெண்ணும் கிறிஸ்தவளாக கிறிஸ்துவின்சபை அங்கத்தினராக இருக்க வேண்டும். கிறிஸ்துவை உண்மையாய்ப் பின்பற்றுகிற ஒரு தோழியிடம் இருந்து எல்லாவிதமான ஊக்கமும் தேவைப்படும். கிறிஸ்தவர் அல்லாத ஒருவரையோ, அல்லது பிரிவினைசபையைச் சார்ந்த ஒருவரையே திருமணம் செய்வது மிகுந்த நஷ்டத்தைக்கொடுக்கும். பவுல் பின்வருமாறு கூறுகிறார்."அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்கு பங்கேது"(2கொரிந்தியர் 6:14–15).

ஒருவர் விசுவாசியாயிருந்து அதே சபையில் அங்கத்தினராக இருந்தால் பிரச்சனையில்லை என்று விவாதிக்கலாம். அனால் அது மிகப்பெரிய பிரச்சனையாகவும் மாறலாம். சிறந்த வழி என்னவென்றால் உங்கள் விசுவாசத்தையும் தேவனோடு கூடிய உறவையும் பகிர்ந்து கொள்ள முன்வராதவரோடு திருமணத்தில் பிணைக்கப்படுவதை தவிர்ப்பது நல்லது.

திருமணத்தைப்பற்றி அடுத்த கேள்வி என்னவென்றால்? நீங்கள் இருக்கின்ற பகுதியிலுள்ள சபை சிறியதாக இருந்து இளம் கிறிஸ்தவ பெண்கள் அங்கு இல்லை என்றால் என்ன செய்வது? அப்படிப்பட்ட சூழ்நிலையில் திருமணம் செய்யும் முன்பு தேர்ந்தெடுக்கிற பெண்ணுக்கு சத்தியத்தை போதித்து, அவளோடு கூட அவள் குடும்பமும் இரட்சிக்கப்படும்படியாக செய்ய வேண்டும். ஒரு பெண்ணை மாற்ற முடியவில்லையென்றால் வேறு ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுக்கலாம். மனைவியாகும்படி தகுதியான ஒருபெண்ணைக் கண்டுபிடித்து மனமாற்ற முடியாமற் போனால் திருமணம் செய்வதா? அல்லது கர்த்தருக்கு ஊழியம் செய்வதா? என்று தீர்மானிக்கவேண்டும். பிரசங்கியார் ஒருவருக்கு கிறிஸ்துவின்சபை அங்கத்தினரல்லாத ஒரு பெண்ணைத் திருமணம் செய்வது மிகுந்த நஷ்டத்தில் முடியலாம்.

ஆனால் அந்த வாலிப பிரசங்கி அவளை திருமணம் செய்து மனைவியாக்கினபின் மனமாற்றிக் கொள்ளலாம் என்று சொல்லலாம். இது கேட்பதற்கும் சிந்தனை ரீதியாகவும் நன்றாக இருந்தாலும் அநேக சமயங்களில் திட்டமிட்டபடி நடப்பதில்லை. நிச்சயமாகவே ஒருவர் தன்னுடைய மனைவியை கர்த்தருடைய சபையின் அங்கத்தினராகும்படி கட்டாயப்படுத்தக் கூடாது. அவளுக்கென்று ஒரு மனம் உண்டு. அவளுடைய சொந்த ஆத்மாவிற்கு அவளே

பொறுப்பு. அவள் போதிக்கப்படுவது மட்டுமல்லாமல் சுயமாக தீர்மானிக்கவும் சுதந்திரமளிக்க வேண்டும். அவள் செவிசாய்க்க மறுத்துவிட்டால் என்ன செய்வது? திருமணமானவராக இந்த சூழ்நிலையிலிருந்தால் அது பெரிய பிரச்சனைக்குரியதுதான். இந்தப் பிரச்சனையை எப்படித் தவிர்ப்பது என்றால் முதலாவது கிறிஸ்துவின் சபை அங்கத்தினர் அல்லாத ஒருவரை திருமணம் செய்யாமல் இருப்பதே.

ஒருவர் தான் திருமணம் செய்யப்போகிற ஒருவர் தன்னுடைய வாழ்க்கையில், வேலையில் தான் வசிக்கின்ற பகுதியில் உள்ளவர்கள் மத்தியில் ஏற்படுத்தும் செல்வாக்கு முக்கிய பங்கு வகிக்கும் என்பதை நன்றாக மனதில் கொள்ளவேண்டும்.

ஒரு பிரசங்கியார் தான் செய்யும் ஊழியத்தில் ஒரு பங்காயிருக்கும்படி அந்த ஸ்திரீ தன்னோடுகூட கிறிஸ்துவுக்குள் இணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றே விரும்புவார். தான் நேசித்து, மதித்து, தன்னுடையபிள்ளைகளுக்கு அவள் தாயாக இருப்பதை பெருமையாக எண்ணுமளவிற்கு அவள் இருக்க வேண்டும். குடும்பத்திலே கணவன் சம்பாதித்து மனைவியையும், பிள்ளைகளையும் காப்பாற்றுகிறவனாகிறான். ஆனால் மனைவியோ குடும்பத்தையும், பிள்ளைகளையும் கவனிக்கிறவளாகிறாள்.

வீட்டை சுத்தமாக வைப்பதிலும், ஆகாரம் கொடுப்பதிலும், பிள்ளைகள் சுகவீனப்படும்போது அவர்களைக் கவனிப்பதிலும், அவர்களுடைய குணாதிசயங்கள் மற்றும் ஆவிக்குரிய வாழ்க்கையைக் கட்டுவதிலும் கவனம் செலுத்துகிறாள். ஆகவே பிரசங்கியார் அல்லது ஒரு மனிதன் சொந்த குணாதிசயங்களுக்கும், திறமைகளுக்கும், தியாகத்திற்கும் ஏற்றவாறு ஒரு மனைவியை தேர்ந்தெடுக்க வேண்டும்.

குடும்பம் என்பது அதனுடைய எல்லா அங்கத்தினருக்கும் வசிக்கின்ற இடமாக இருக்க வேண்டும். அது கிறிஸ்துவை கனம் பண்ணுகிற இடமாக இருக்க வேண்டும். அங்கே கணவனும், மனைவியும் மதிக்கப்பட்டும், நேசிக்கப்பட்டும், உதவிசெய்யப்பட்டும், உற்சாகப்படுத்தப்பட்டும் இருக்க வேண்டும். வீடு என்பது தன்னுடைய பெலத்தையும் நோக்கங்களையும் மீண்டும் உறுதிசெய்வதற்கும் சந்தோஷமாகயிருப்பதற்காகவும் கூடுகின்ற இடமாகவும் இருக்க வேண்டும். அது சண்டையும், சச்சரவும் தொடர்ந்து நடக்கும் இடமாக இருக்கக் கூடாது. குடும்ப அங்கத்தினர்கள் ஒருவரை ஒருவர் அறியாமல் உண்பதற்கும் உறங்குவதற்கும் பயன்படுத்தும் இடமாக இருக்கக் கூடாது. மாறாக வேதத்தைப் படிப்பதற்கும் ஜெபிப்பதற்கும் ஐக்கியப்படுவதற்கும், சமாதனத்திற்கும், மனநிறைவுக்கும் உரிய இடமாக இருக்க வேண்டும்.

நிச்சயமாகவே வாழ்க்கையில் சில பிரச்சனைகள் இருக்கும். ஒருவன் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தைக் கட்டுவானென்றால் அந்த பிரச்சனைகள்

தீர்க்கப்பட்டுவிடும். மனைவியானவள் வீட்டுக்கு வெளியேயும் நன்கு மதிக்கப்படவேண்டும். தன்னுடைய பிள்ளைகளுக்கும் பிராந்திய சபைகளிலுள்ள மற்ற பிள்ளைகளுக்கும் போதிக்கும்படியாக தன்னைத் தயார் செய்யும்படி பயிற்சியும், ஊக்கமும் அவர்களுக்கு அளிக்கப் படவேண்டும். அவள் தன்னுடைய கணவனோடு மற்ற அங்கத்தினர்களை சந்திக்கவும் மற்ற இடத்திற்கு, குறிப்பாக வீட்டில் கணவன் மார்கள் இல்லாத இடத்திற்கு அவர் போகும்போது மனைவியும் கணவரோடு சொல்லவேண்டும். மனைவியானவள் கணவனுக்கு உதவியாகவும், ஆதரவாகவும் இருந்து, உண்மையான கிறிஸ்தவ மனைவியாகவும், உபசரித்தல், வியாதியஸ்தர் மற்றும் தேவையுள்ளோருக்கு உதவுதல் மேலும் நற்கிரியைகள் செய்வதன் மூலமாகவும் தன்வீட்டை கட்டுகிறவளாக இருக்க வேண்டும்.

வேதத்தினுடைய போதனையின்படி பிள்ளைகள் வளர்க்கப்பட வேண்டும். தங்கள் பெற்றோர்களை மதிக்கிறவர்களாகவும், மற்ற பிள்ளைகளிடமும், வாலிபரிடமும் நல்ல செல்வாக்கு உடையவர்களாகவும் இருக்க வேண்டும் (எபே 6:1–4).

அவர்கள் வளர்ந்து வாலிபர்களாகும்போது, அவர்களும் கிறிஸ்தவர்களாக தக்கவிதத்தில் போதிக்கப்பட்டும் பயிற்றுவிக்கப்பட்டும் இருக்க வேண்டும்.


ஒரு பிரசங்கி தன்னுடைய குடும்பத்தில் மட்டமாக நடந்து கொள்ளக்கூடாது. அப்படிப்பட்ட நிலை ஒருபோதும் வரக்கூடாது. அவருடைய நடத்தையாலோ அல்லது அவருடைய மனைவியின் நடத்தையாலோ பிரிவினை உண்டாகி விவாகரத்தாகிறது. இந்த விதமான சம்பவம் எப்போதாவது நடைபெறுமானால் அது பிரசங்கியாருடைய குற்றமோ அல்லவோ அப்படிப்பட்டவர் அவருடைய எதிர்மறையான மாதிரியின் விளைவாக பிரசங்கிப்பதை நிறுத்திவிடவேண்டும்.

## நடப்புச் செய்திகள்

- பிளஸ்–2 வகுப்பில் கணிதம், அறிவியல் உள்ளிட்ட 8 பாடங்களில் கடினமான சில பக்கங்கள் நீக்கப்பட்டுள்ளது என்றும், அந்த பகுதிகளில் இருந்து இந்த ஆண்டு தேர்வுக்கு கேள்விகள் கேட்கப்படாது என்றும் அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார்.
- ஜனவரி மாதம் 1.5 லட்சம் இலவச கியாஸ் அடுப்புகள் வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.
- ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டில் உள்ள துபாயில் உலகின் முதல் சுழலும் 30 மாடிக்கட்டிடம் கட்டப்பட இருக்கிறது.
- 15–வது ஆசிய விளையாட்டுப்போட்டி கத்தார் தலைநகர் டோகாவில் டிசம்பர் 1–ல் தொடங்கி 15–ந் தேதி வரை நடக்கிறது.

# கிறிஸ்துவைப் பகிர்ந்து கொள்ளுதல்
# Sharing Christ

*-Dale Grissom*



எல்லா தொழில் நுட்பங்களும், எல்லா கணிணிகளும், எல்லா தொலைக்காட்சி பெட்டிகளும், எல்லா வானொலிகளும், எல்லா காகிதங்களும் புத்தகங்களும் கருத்தரங்கங்களும் நிகழ்ச்சிகளும் தனித்தாள் ஊழியத்தின் இடத்தை எடுத்துக்கொள்ள முடியாது. இவைகளெல்லாம் உதவிகளாக இருக்க முடியும், ஆனால் எல்லாமே இழந்துபோன ஆத்துமாக்களைக் கிறிஸ்துவினிடத்தில் கொண்டுவர ஒன்றோடொன்று இசைந்திருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. முகம்முகமாக தனிப்பட்ட விதத்தில் பிரசங்கிப்பதை விடுத்து இழந்துபோனவர்களைச் சந்திப்பதற்காக பல பெரிய திட்டங்கள் தீட்டப்படுகின்றன, ஆனால் நேரடியாக இருந்துகொண்டு இழந்துபோன சில எளிமையான ஆத்துமாக்களுக்கு தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொள்ளும் சிலாக்கியத்தை வேறொன்றும் எடுத்துக்கொள்ளமுடியாது.

அன்பு மாபெரும் கட்டளையை எடுத்துச் செல்வதில் இப்பேர்பட்ட பெரிய பங்கு வகிக்கிறது (மத்.28:19,20; மாற்.16:15,16). தேவன் தம்முடைய குமாரனை நமக்காகக் கொடுத்த அந்த அன்பே இது (யோவா.3:16). கிறிஸ்து தம்முடைய சபையை (தம்முடைய ராஜ்யம்) ஸ்தாபிக்கும்படி தம்மை மனிதனுக்காக ஒப்புக்கொடுத்த அன்பே இது. இழந்து போனவர்களுக்கு சுவிசேஷமாகிய செய்தியை எடுத்துச் செல்ல நம்மை நெருக்கி ஏவக்கூடிய (ரோம.1:16) அந்த அன்பை நாமும் நம்முடைய இருதயங்களில் மனிதர்களின் ஆத்துமாக்களுக்காகப் பெற்றிருக்க வேண்டும்.

ஒரு வெற்றியுள்ள ஆத்தும ஆதாயம்பண்ணுகிறவனாயிருக்க ஒரு கிறிஸ்தவனுக்கு, அவன் ஒரு விசுவாசமிகுந்த கிறிஸ்தவனாகவும், தன்னுடைய ஆத்துமா இரட்சிக்கப்பட்டுள்ளது என்ற நிச்சமுள்ளவனாகவும் இருக்கவேண்டும். அவனுடைய இருதயம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் போதிப்பதற்கு அனல் கொண்டிருக்க வேண்டும். அவன் ஒருவனாய் கிளம்புகிறவனாகவும், (self - starter), தேவ வார்த்தையைப் பற்றிய அறிவுடையவனாகவும் இழந்துபோன ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய அர்ப்பணிக்கப்பட்டவனாகவும் இருக்கவேண்டும்.

இழந்து போனவர்களை ஆதாயம் செய்வதில் சக்திவாய்ந்தவராய் இருக்க விரும்புகிற ஒருவர் கண்டிப்பாக தன்னுடைய தவறுகளிலிருந்து கற்றுக்கொள்ள ஆயத்தமுள்ளவராக இருக்கவேண்டும். மாபெரும் கட்டளையை எடுத்துச் செல்ல மறுப்பதற்கும் கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய மறுப்பதற்கும் வாழ்க்கை என்பது மிகக் குறுகியதும் மதிப்புவாய்ந்ததுமாகவும் இருக்கிறது. உலகம் நம்முடைய வாசல்களுக்கு வெளியே தான் ஆரம்பிக்கிறது. இது நம்முடைய சமுதாயத்தில் நம்மைச்

சூழ்ந்திருக்கிறது மேலும் ஒவ்வொருவரும் அத்தோடு தொடர்புடையவர் களாயிருக்கிறோம்.

இப்போது நம்முடைய வாழ்வைக் குறித்து தியானிப்பதற்கும் கிறிஸ்துவுக்காக ஜனங்களை சந்திப்பதற்கு நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்று அறிந்து கொள்வதற்கும் இது ஒரு நல்ல தருணம். இப்போது கிறிஸ்துவுக்கு அநேகரை சம்பாதிக்க ஒரு சபதம் எடுத்துக்கொள்வதற்கு இது ஒரு நல்ல தருணம். மரணத்தின் நிழல் நம் ஒவ்வொருவரையும் நெருங்கிக் கொண்டிருக்கிறது; ஒவ்வொரு மணித்துளியும் நியாயத்தீர்ப்பில் கர்த்தரை சந்திப்பதற்கு நாம் மிக நெருங்கிக் கொண்டிருக்கிறோம். நம்மோடுகூட யாரையாவது பரலோகத்திற்கு அழைத்துச் செல்லுவது அற்புதமாயிராதா!

# அத்தேனே – ATHENS

இது கிரேக்க தேசத்திலுள்ள விசேஷமான பட்டணம். இது துறைமுகத்திலிருந்து மூன்று மைல் தூரத்தில் ஒரு சமவெளியில் கட்டப்பட்டிருந்தது. இந்த வெளியில் உயர்ந்த மேடைகள் இருந்தன. அவைகளில் ஒன்றின்மேல் அத்தேனே தேவிக்கு (விக்கிரகம்) ஒரு கோவில் இருந்தது. இதற்கு அடுத்த இன்னொரு குன்றின்மேல் "மார்ஸ்மேடை" என்ற ஒரு இடமிருந்தது. இவ்விடத்திலே அவர்களுடைய சங்கம் கூடுவது வழக்கம். பிரசங்கம் பண்ணுகிறவர்களுக்கும் இந்த இடம் கொடுக்கப்பட்டது பவுலும் அப்படியே இவ்விடத்தில் பிரசங்கஞ்செய்தான். அப்17:15-34.

அத்தேனே பட்டணத்தில் நாகரீகத்திலும், படிப்பிலும் பேர் பெற்ற கலாசாலைகளும் இருந்தன. இதினிமித்தம் படிப்பாளிகள் வேறு தேசங்களிலுமிருந்து அங்கே போவது வழக்கம். ***S.Rajaprasath***

# பொது அறிவு சோதனை

1. உச்ச நீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதி யார்?

அ) அன்னிபெசன்ட் அம்மையார் ஆ) விஜய லட்சுமி பண்டிட் இ) பாத்திமா பீவி

2. இந்தியாவில் எத்தனை ரெயில் நிலையங்கள் உள்ளன?

அ) 6,329 ஆ) 6,867 இ) 5,123

3. காகித ருபாய் நோட்டுக்கள் அச்சிடப்படும் இடம் எது?

அ) நாசிக் ஆ) மும்பை இ) நாக்பூர்

4. தமிழகத்தில் மோனசைட் தாது எங்கு கிடைக்கிறது?

அ) தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆ) சேலம் இ) வேலூர்

5. அரபிக் கடலில் கலக்கும் ஆறு எது?

அ) கோதாவரி ஆ) நர்மதா இ) கிருஷ்ணா

**விடைகள்: 1. பாத்திமா பீவி 2. 6,867 3. நாசிக் 4. தூத்துக்குடி, கன்னியாகுமரி 5. நர்மதா**

# சத்திய வார்த்தையில் சரித்திரம்

John S.Nathan, Gospel Minister
Christian City Church of Christ, (Minjur) -601 203, S.INDIA.
Mobile: 9841017621

**மூன்றாம் அலெக்சாண்டர் மாவீரன்** ( Defender of men)
தோற்றம்: 20.9.356 B.C - மறைவு: 30.2.323 B.C.
தந்தை: 2ஆம்பிலிப்பு . மக்கெதோனியாவின் மன்னன்.

★ எகிப்தை வென்ற உடனே அலெக்சாண்ரியா நகரை நிறுவினான்.

★ உலகிலேயே முதன் முதலில் நாணயத்தில் தன் உருவத்தை பதித்த பெருமையுடையவன்.

★ கை, கால் வலிப்பு நோய் (Epileptic) உள்ளவன்.

★ வலது கண் நீல நிறமும், இடது கண் கறுப்பு நிறமும் உள்ளவன்.

★ இடது கை பழக்கமுள்ளவன், குள்ளமானவன்.

★ தனது 20-வது வயதில் மாசிடோனியாவின் மன்னனாக முடி சூட்டப்பட்டான்.

★ 13 வருட ஆட்சிகாலத்தில், கிரீஸ் முதல் எகிப்துவரைக்கும் மற்றும் இந்தியாவின் வடமேற்கு பகுதிவரை 3 கண்டங்களை ஆட்சி செய்தான்.

★ முப்பெரும் கண்டங்களை வெல்ல, ஐம்பெரும் படையை மேற்கொண்ட மகா அலெக்சாண்டரால் 22 நாட்களே வாழக்கூடிய கொசுவை வெல்ல முடியாமல் 11 நாள் காய்சலுக்குப் (மலேரியா) பிறகு பாபிலோனில் 30.2.323-ல் மரணம் அடைந்தான் (அப்போது பெப்ரவரிக்கு 30 நாட்கள் இருந்தது).

★ சிறுவனாக இருந்தபோது ப்யுனி பேலஸ் என்ற முரட்டு அரேபிய குதிரையை அடக்கி சவாரிசெய்தவன்.

★ தனது ஆசானும், வழிகாட்டியுமான அரிஸ்டாட்டில் (Aristotle 427-347 B.C) அறிவுரையான, உலகை வென்றிட கிரேக்க கலாச்சாரத்தைப் பரப்பு என்ற கொள்கையை கடைபிடித்தவன். இறுதியாக தான் வென்ற இந்தியாவை மன்னன் புருஷோத்துமன் திரும்ப ஆண்டிட வழிவகுத்தவன்.

★ அவன் மரணத்திற்கு பிறகு மனைவிகளும், மகன்கனும், சகோதரர்களும் இருந்தும், அவர்களின் சொந்த மக்களால் கொலை செய்யப்படுவதற்கு முன்னமே அவன் 3 தளபதிகளுக்கு, தன் நாட்டை ஆள நியமித்தான்.

1. TOLEMY எகிப்தையும்
2. SELEUCUS கிழக்கு கிரீஸ் நகரையும்
3. CASSENER மசிடோனியாவையும்


தானியேல் 11:2-4 (கி.மு. 539 -ல் எழுதப்பட்ட தீர்க்கதரிசனத்தின்படி 300 ஆண்டுகளுக்குப் பிறகு கிரேக்கராஜ்யம் தனது பலத்தை சிறிது, சிறிதாக இழந்து கடைசியில் தன் வம்சத்தினர் யாருமே ஆட்சிசெலுத்தாமல் அழிந்தது). இவ்வாறாக சத்தியவார்த்தை நிறைவேறினது.

**சிறுவர் பகுதி**

# நோவா – NOAH

*வேத பகுதி: ஆதியாகமம்6:1–24*

*-K.Mohan*



கர்த்தருக்குள் பிரியமான பிள்ளைகளே தேவன் ஆதியிலே பூமியை உருவாக்கி மனுஷன் உள்ளிட்ட ஜீவ ஜந்துக்களை உருவாக்கினார். விசேஷமாக மனுஷனை தம்முடைய சாயலின் படி உருவாக்கினார். மனுஷர்கள் பூமியிலே பலுகிப்பெருகினபோது அவர்களோடே அக்கிரமமும் பெருகிற்று. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் பூமியை நோக்கிப்பார்த்தார். அப்பொழுது, "மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாகினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது" (ஆதியாகமம்6:5,6).

இப்படிப்பட்ட அக்கிரமம் நிறைந்த ஜனங்கள் மத்தியில் ஒரு நீதிமான் காணப்பட்டான். அவன்தான் நோவா. "நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்; நோவா தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான்" (ஆதியாகமம்6:9). நீங்கள் இந்த நோவாவைப்போல வாழ ஆசைப்படுகிறீர்களா? அல்லது அங்கே துன்மார்க்கமாக வாழ்ந்து தேவனுக்கு மனஸ்தாபத்தைக் கொண்டு வந்த ஜனங்களைப்போல வாழ ஆசைப்படுகிறீர்களா? நோவாவைப்போல வாழுவோம் என்றால் கர்த்தருடைய கண்களில் தயையைப்பெற்றுக்கொள்வோம். நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான். அருமையான தம்பி, தங்கைகளே நீங்களும் அப்படியிருப்பீர்களா. அப்பா, அம்மா, நண்பர்கள், மற்றும் உறவினர்களிடம் பொய்சொல்லாமல் உண்மையாயிருப்பீர்களா!

இந்த நோவா அப்படியிருந்தபடியால் அழிவிலிருந்து காக்கப்பட்டார். தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் நோவா செய்து முடித்தார். என்னால் இதை செய்யமுடியாது தேவனே என்று அவர் தேவனை நோக்கி முறையிடவில்லை. நீ கொப்பேர் மரத்தால் உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு என்றார். அந்தப்படியாக நோவா செய்தார். அவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்த அவனுடைய குடும்பத்தாரும் காக்கப்பட்டார்கள். பக்தியுள்ள பெற்றோரின் வார்த்தைக்கு கீழ்ப்படியும் போது நாமும்கூட காக்கப்படுவோம். இந்த உலக அழிவிலிருந்து காக்கப்பட கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுப்போம்!

**மனப்பாட வசனம்**

"நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது" (ஆதியாகமம்6:8).

# வேத அறிவுப் போட்டி எண்.76

*போட்டியாளர்கள் கவனத்திற்கு,*

*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் **இம்மாதம் 25ம்தேதிக்குள்** எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். **பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.***

1. மாயவித்தைக்காரராயிருந்தவர்கள் சுட்டெரித்த புஸ்தகங்களின் தொகை எத்தனை வெள்ளிக் காசாகக் கண்டார்கள்?
2. இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்: அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும், விசுவாசிக்கிறவன் பதறான் என்று எந்த தீர்க்கதரிசி மூலம் கர்த்தர் உரைத்தார்?
3. நம்பிக்கையிலே, உபத்திரவத்திலே, ஜெபத்திலே எப்படியிருங்கள் என்று பவுல் எழுதுகிறார்?
4. தன்னுடையதல்லாததைத் தனக்காகச் சேர்த்துக்கொள்ளுகிறவனுக்கு என்ன?
5. சகோதரரே, எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணவேண்டாமென்று நீங்கள் எங்களாலே கற்றுக்கொள்ளவும்; என்று எழுதுகிற அப்போஸ்தலன் யார்?
6. உத்தமமான வழியில் நடக்கிறவன் யாரைச் சேவிப்பான்?
7. சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே என்னசெய்யுங்கள்?
8. அவனவன் தன் தன் வாயின் பலனால் என்னவாவான்?
9. மூப்பனானவனுக்கு விரோதமாக ஒருவன் செய்யும் பிராதை இரண்டு மூன்று சாட்சிகள் இல்லாமல் என்ன செய்யக்கூடாது?
10. தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினவன் யார்?

வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே
யோவான் 5:39

Owned and published by B.Arjunan from 17.2.102 D/5, Rajan Nagar, Batlagundu - 624 202 and Printed by R.Sathiyamoorthi at Bharathi Press,14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202 Editor: B.Arjunan.

R.N.I. No.TNTAM/2000/3629 Postal Registration. No. TN/SR-164/2006-2008 Lincensed to Post without prepayment License No.TN/WPP-25/SR/2006-2008 Posted at Batlagundu Post Office on 10th Dec. 2006.

**கிறிஸ்துவின் சபையார் வழங்கும் கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சியை**

**உங்கள் வானொலியில்**






இலங்கை ஆசிய சேவை SW 49 மீட்டரில்
ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 வரை கேளுங்கள்
மேலும்


**உங்கள் WIN TV யில்**






ஒவ்வொரு வாரமும் திங்கள், செவ்வாய் மற்றும்
வியாழன், வெள்ளி காலை 6.15 முதல் 6.30 மணி வரை பார்த்து
சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

**மாத இதழ் மற்றும் வேதபாடம்**







தேவைக்கு உடனே எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

THE WORD OF CHRIST
P.O.Box.No.5
Batlagundu - 624 202. S. India
Phone:04543-263278 Mobile:94435-58041 e.mail:thewordofchrist@sancharnet.in






**Church of Christ Gospel Preachers**



First Row: L to R 1)B.Arjunan, Dindigul Dt.,
2) John Schwartz, Nagai Dt.,
3) P.Boopathi, Karur Dt.,
4) R.Fernandas, Dharmapuri Dt.,
5) D.David Doss, Cuddalore Dt.,
6) J.Alphons, Thiruvarur Dt.,
Sec. Row: L to R 7) Viji, Tuticorin Dt.,
8) S.Rajendran, Erode Dt.,
9)P.David Murugan, Pudukkottai Dt.,
10) Christy Kumar, Theni Dt.,
11) A.Prabakaran, Namakkal Dt.,
12) M.Rajamani, Tirunelveli Dt.,
13) P.Govindarajan, Thanjavur Dt

**Monthly Magazine**

**To**

**From**

Editor
THE WORD OF CHRIST
P.O.Box.No.5
Batlagundu - 624 202